## இலங்கை அணுசக்தி அதிகாரசபை - 2015

இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 40 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 76(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 இலங்கை அணுசக்தி அதிகாரசபையினை ஸ்தாபித்தல்

1969 இன் 19 அணுசக்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அணுசக்தி அதிகாரசபை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி இல்லாமலாக்கப்பட்டு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் மூலம் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் இலங்கை அணுசக்தி அதிகாரசபையும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. தேசிய அபிவிருத்தி தேவைப்பாடுகளை நோக்காகக் கொண்டு அணுசக்தி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை மேம்படுத்துவதும் ஊக்குவிப்பதும் இலங்கை அணுசக்தி அதிகாரசபை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகாரசபையை ஸ்தாபிக்கும் போது இலங்கை அணுசக்தி அதிகாரசபையிடமிருந்த ரூபா 864,205,322 ஆன தேறிய சொத்துக்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருந்தன.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கொண்டு செல்லும் பெறுமதிகளும் அவற்றின் நியாயப் பெறுமதிகளும் கருத்திற் கொள்ளக்கூடியளவில் வேறுபட்டிருந்தால் மீள்மதிப்பீடு தேவையாக இருந்த போதிலும், நீண்டகாலமாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டிருந்த சொத்துக்களை அதிகாரசபைக்கு கையளிக்கும் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் காண்பிக்கப்படும் கோபேல்ட் 60 மூலத்தை பெறுமானத்தேய்வு செய்யும் அடிப்படை, கணக்கீட்டுக் கொள்கையில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது அணுசக்தி அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட கெம்மா நிலையத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டிற்குரியதாக இனங்காணப்பட்ட ரூபா 10,044,000 தொகையான கோபேல்ட் 60 மூலத்தின் பெறுமானத்தேய்வின் அளவு பிற்போடப்பட்ட செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அப்பெறுமதி எதிர்கால உழைப்புக்களுக்கு எதிராக பதிவழிக்கப்படுமென நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் உழைப்பிற்கு எதிராக அச்செலவினமோ அல்லது அதன் பகுதியொன்றோ பதிவழிக்கப்படாதிருந்ததுடன், பதிவழித்தல் தொடர்பாக நிலையான கொள்கையொன்று அறிமுகப்படுத்தாமல் 2015

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பிற்போடப்பட்ட செலவினமொன்றாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 280,406 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கதிர்வீச்சு பரிசோதனை தேசிய நிலையத்தின் நிதிச் செயலாற்றல் கூற்றின் வருமானத்திற்குரிய பட்டோலையுடன் ஒப்பிடும் போது ரூபா 817,434 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2015 சனவரி 01 ஆந் திகதி அணுசக்தி அதிகாரசபையின் ரூபா 190,768,275 புத்தகப் பெறுமதியான 07 நிலையான சொத்து உருப்படிகள் இலங்கை அணுசக்தி அதிகாரசபைக்கு கையளிக்கும் போது பௌதீகரீதியில் மெய்மையாய்வு செய்யப்படாமல் கையளிக்கப்பட்டிருந்தமையால் அச்சொத்துக்களின் உள்ளமை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று கணக்காய்வின் போது பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 16,601,305 தொகையை மீளாய்வாண்டின் போது தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 371(2) | உப கட்டுநிதி அது வழங்கிய செயற்பாடு முடிவடைந்தவுடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் 47 நாட்கள் முதல் 320 நாட்கள் வரை தாமதித்துத் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | முறையான ஊக்குவிப்புப் படி முறையொன்று தயாரிக்கப்படாமலும் பொதுத் திறைசேரியிடமிருந்து அதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் அதிகாரசபையினால் 2015 ஆம் ஆண்டிற்காக அதன் ஊழியர்களுக்கு ரூபா 1,950,000 தொகை ஊக்குவிப்புப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகளின் நிதி விளைவுகள் ரூபா 20,985,772 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அணுத் தொழில்நுட்பத்துடன் இணைந்த பயன்பாட்டினை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைகளை வழங்குதல், அது தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், புதிய உபாயங்களை மேம்படுத்துதல் மற்றும் அவற்றிற்கு உதவியளித்தல், கதிர்வீச்சு பாதுகாப்பிற்கான சேவைகளை வழங்குதல், வர்த்தக அல்லது ஏனைய செயற்பாடுகளுக்காக கதிர்வீச்சு மற்றும் அணுத் தொழில்நுட்பம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பன அதிகாரசபையின் நோக்கங்களாகும்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணியில் ரூபா 746.6 மில்லியன் செலவிடப்பட்டு முதலீட்டுச் சபையின் செயற்திட்டமொன்றாக பன்நோக்கு ஹெமா கதிரியக்க வசதி (Multipurpose Gamma Irradiator Facility) நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்நிலையம் 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது நிலையத்தின் சேவை விற்பனைகளிலிருந்து 97 சதவீதத்தைப் பெற்றுக்கொண்ட பிரதான கொள்வனவாளர் 2016 ஆம் ஆண்டின் போது இழக்கப்பட்டமையால் நிலையத்தின் இயந்திரகூடத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 சனவரி 28 ஆந் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2015 இன் முதல் மூன்று மாதங்களுக்கு ஒப்பாக 2016 இன் முதல் மூன்று மாதங்களில் வருமானம் 72 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் கெம்மா நிலையம் ஒரே நிறுவத்தின் பேரில் சேவை விற்பனை தங்கியிருப்பதால் எதிர்வரும் நடவடிக்கைகளை பராமரித்துச் செல்லல் தொடர்பாக இடருக்குட்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் ஏற்படும் இடரை இனங்கண்டு மாற்று சேவை நாடுனர்களை இனங்காண்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி (i) இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்ற காலப்பகுதிக்கு ஒப்பாக அதன் மீண்டெழும் செலவினங்களில் தெளிவான குறைவொன்று இல்லாமல் இருந்ததுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஊழியர்களுக்காக செலுத்தப்படும் விசேட மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு போன்ற படிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் தொடர்ந்தும் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இலங்கை அரசிற்குச் சொந்தமான கதிரியக்க வசதிகளுடன் (Irradiator Facility) ஒரே நிறுவனமான இலங்கை கெம்மா நிலையத்தின் வளங்களைப் பயன்படுத்தி அரச நிறுவனங்களிலிருந்து கட்டளைகளையோ அல்லது கதிரியக்க வசதிகளுக்காக கெம்மா நிலையத்துடன் தொடர்புபடுத்தி அந்நிய செலவாணியை சேமிக்கக் கூடிய இயலுமை தொடர்பில் அரசின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் கட்டிடத் தொகுதியை மாலபே தகவல் தொழில்நுட்ப பூங்காவில் மீள் நிர்மாணிப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மீளமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக செயற்திட்டப் பணிப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவரின் கடமைகள் பொறுப்புக்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கையொன்றுக்கு வராமல் சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 516,946 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சபையின் செயற்பாடுகளால் சுற்றாடலுக்கும் பொது மக்களுக்கும் பாதகமான சுகாதாரப் பிரச்சினைகள் தெரிவித்து பிரதேசவாசிகள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையொன்றின் எதிர்ப்புக் காரணமாக இம்மீளமைப்பிற்கான கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் 2015 யூன் மாதத்தின் போது முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரையில் 10 மாதங்கள் அளவிலான காலம் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதிகாரசபையின் மீளமைப்பு நடவடிக்கைகளும் அதன் காரணமாக தாமதமாக இருப்பதால் பின்வரும் பாதகமான நிலைமை ஏற்படக் கூடுமென அவதானிக்கப்பட்டது.

* அதிகாரசபையை ஒருகொடவத்தையிலிருந்து மாலபே கொண்டு செல்வது தாமதமான காரணத்தினால் உத்தேச புதிய களனி பாலச் செயற்திட்டமும் தாமதமடைவதால் அதன் மூலம் அச்செயற்திட்டத்திற்கு ஏற்படும் கிரயம் அதிகரித்தல் மற்றும் செயற்திட்டத்தை துரிதமாக நிறைவு செய்வதன் மூலம் பொதுமக்களுக்கு கிடைக்கும் நலன்களும் தாமதமடைதல்.

* அதிகாரசபையின் நடவடிக்கைகளை பாரியளவு விரிவாக்குவதற்கு ஏற்படும் தாமதம் காரணமாக அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை பயன்படுத்தி நாட்டிற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய நலன்களும் தாமதமடைதல்.

(இ) அதிகாரசபைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு மென்பொருள் முறைமைக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 820,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சரியாக செயற்படுகின்றதா என்பது தொடர்பாக 2016 மே 24 ஆந் திகதி வரையிலும் மதியுரையாளரொருவரால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. ஊழியர்களால் இம் மென்பொருள் முறைமை மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கு இசைவாகும். வரையில் மென்பொருள் முறைக்கு இணையாக நிறுவகத்தின் பதிவேடுகளை கையால் எழுதி (Mannually) பேணப்பட வேண்டிய போதிலும், (Parallel Run) 2015 ஆம் ஆண்டில் பதிவேடுகள் அதன் பிரகாரம் பேணப்படாதிருந்தமையால் கணக்கீட்டு மென்பொருள் முறையின் பிழைகள் தொடர்பாக மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை கெமா நிலையத்தின் இயலளவினை மேம்படுத்துவதற்காக கோபேல்ட் 60 மூலம் 250 KCi இனை வழங்கி போக்குவரத்துச் செய்யப்பட்டு நிறுவுவதற்காக கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 28 ஆந் திகதி அதற்காக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து ரூபா 125,000,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் கட்டளை அதிகரிப்பதற்குப் பதிலாக கெம்மா நிலையத்தின் பிரதான கொள்வனவாளரின் கட்டளை இழக்கப்பட்டதன் அடிப்படையில் கோபேல்ட் 60 மூலம் கட்டளையிடல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமாக இல்லாதிருந்தமை கணக்காய்வு திகதியான 2016 ஏப்ரல் 27 ஆந் திகதியளவிலும் கட்டளையிடல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 125,000,000 ஆன ஏற்பாட்டுத் தொகை உரிய செயற்பாட்டிற்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கையில் அதிகாரசபையால் 2016 சனவரி 08 ஆந் திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் 2016 சனவரி 18 ஆந் திகதி அப்பணம் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

களஞ்சிய தன்னியக்க செயற்பாட்டு நோக்கத்திற்காக அணுசக்தி அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 389,375 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் பொதியொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், எவ்விதப் பயன்பாடுமின்றி அது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிதி மற்றும் நிர்வாக பிரிவினை சுயாதீனமாக்குவதற்காக பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாக பணிப்பாளராக 02 சிரேஷ்ட மட்டப் பதவிகளும் 2015 திசெம்பர் 04 ஆந் திகதி அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை வெற்றிடமாக காணப்பட்டத. அப்பதவிகள் இரண்டிலும் செயற்பாடுகள் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றில் இருக்கும் சிரேஷ்ட பிரதி பணிப்பாளரால் (நிதி மற்றும் நிர்வாகம்) மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன், உரிய பிரிவுகளின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) இலங்கை கெமா நிலையத்திற்காக இயந்திரகூட முகாமையாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமையால் இயந்திரகூடத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொழில்சார் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தரொருவரின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக போதியளவு பதவியணியொன்று இல்லாதிருந்தமையால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினால் போதியளவு பகுதியொன்றை மேவுகை செய்ய முடியாதிருந்தது.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

அதிகாரசபையால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் பாதீட்டுற்கும் இணங்க காணப்படவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், 14 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 32 சதவீதத்திலிருந்து 294 சதவீதம் வரையான முரண்கள் நிலவியமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை மதிப்பிடல், பதிவு செய்தல், பாதுகாத்தல் மற்றும் சபையின் வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிராமை |
| (ஆ) பதவியணியினர் கட்டுப்பாடு | முறையாக ஊழியர்களுக்கு கடமைகள் கையளிக்கப்படாதிருந்ததுடன், நிலவும் சம்பள முரண்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |